வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 12.08.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 224 பக்கங்கள் : 12

# "எமது நிலம் எமக்கு வேண்டும்" மன்னாரில் பெரும் போராட்டம்

## வடக்கு-கிழக்கு மக்கள் ஒன்றிணைந்து 14 ஆம் திகதி முன்னெடுக்க அழைப்பு

மன்னார், ஓகஸ்ட் 12

மண்ணையும் மக்களையும் மீட்கவே ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி, அகிம்சை வழி போராட்டமாகவும் இருந்தாலும் சரி இந்த மண்ணில் இடம்பெற்றது. இந்த நிலையில் மன்னார் மக்களின் வாழ்வை பாதிக்கின்ற வகையில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல் பிரதிநிதிகளை எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை மன்னாரில் ஒன்றிணைத்து "எமது நிலம் எமக்கு வேண்டும்" எனும் தொனிப்பொருளில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 2 ஆம் கட்ட காற்றாலை கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டம் ஒன்றை மன்னாரில் 11

## 32 பதின்ம வயது சிறுமிகள் ஐந்து மாதங்களில் கர்ப்பம்

கொழும்பு, ஓக. 12

நாட்டின் இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் பதின்ம வயதினரான 32 சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வருடாந்தம் வெளியிடும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான புள்ளிவிபரங்களின்படி, 2024 ஆம் ஆண்டில் 18 வயதுக்குட்பட்ட 53 சிறுமிகள் கர்ப்பம் 11

## நிர்வாக முடக்கல் போராட்டத்துக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவு

கொழும்பு, ஓக. 12

முல்லைத்தீவு- முத்தையன் கட்டு இராணுவ முகாம் சம்பவத்தை கண்டித்து, வடக்கு-கிழக்கில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள நிர்வாக முடக்கல் போராட்டத்துக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணியும் ஆதரவு வழங்
கவுள்ளதாக அதன் தலைவர், பாராளுமன்ற 11

## சபாநாயகருக்கு எதிராக சி. ஐ. டியில் முறைப்பாடு!

கொழும்பு, ஓக. 12

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு புதிய மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்டத் தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான தினேஷ் அபயகோனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 11

## மன்னார் காற்றாலைத் திட்டத்தால் பறவைகளுக்கு ஆபத்தில்லையாம்

கொழும்பு, ஓக. 12

மன்னாரில் காற்றாலை மின் திட்டங்கள் பறவைகள் மற்றும் வன விலங்குகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறப்படுவதை நிராகரித்த எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, அந்தப் பகுதியை தரிசு நிலம் என்று விவரித்தார்.

அந்தப் பகுதியில் பறவைகளுக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறப்படும் கூற்றுகள் ஆதாரமற்றவை என்று அமைச்சர் கூறினார்.

தான் அந்தப் பகுதியைப் பார்வையிட்டதை வெளிப்படுத்திய அமைச்சர் ஜெயக்கொடி, 11

## மழை அனர்த்தத்தால் யாழில் 32பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12

நேற்று காலை பெய்த மழை அனர்த்தம் காரணமாக யாழ்ப்பாணத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 32பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். 11

## 3 முன்னாள் முதலமைச்சர்கள் விசாரணை வளையத்துக்குள்!

கொழும்பு, ஓக. 12

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, மூன்று முன்னாள் முதலமைச்சர்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக ஆணைக்குழுவின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, சப்ரகமுவ மாகாண முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத், மத்திய 11

## தனியார் கல்விநிலைய கிணற்றில் உயர்தர மாணவி சடலமாக மீட்பு

### வவுனியாவில் பரபரப்பு சம்பவம்

வவுனியா, ஓக. 12

வவுனியாவில் தனியார் கல்வி நிலைய கிணறு ஒன்றில் இருந்து உயர்தர மாணவி ஒருவர் நேற்று திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு காலையில் இருந்து மதியம் 12 மணிவரை வகுப்பு நடைபெற்றுள்ளது. குறித்த கல்வி நிலையத்தில் உயர்தர வர்த்தக பிரிவு 2025 இல் கல்வி கற்ற குறித்த மாணவி 11

## பிரதமர் பதவியிலிருந்து ஹரிணியை நீக்கச் சதி!

### உதய கம்மன்பில தகவல்

கொழும்பு, ஓக. 12

பிரதமர் பதவியிலிருந்து ஹரிணி அமரசூரியவை நீக்கிவிட்டு, அந்த பதவிக்கு பிமல் ரத்நாயக்கவை நியமிப்பது குறித்து ஆளுங்கட்சிக்குள் உள்ளக பேச்சுகள் இடம்பெற்றுவருவதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 11

## பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று முல்லைத்தீவு இளைஞரின் இறுதி சடங்கு



முல்லைத்தீவு, ஓக. 12

முத்தையன்கட்டுகுளம் இடதுகரை இராணுவ முகாமுக்கு வரவழைக்கப்பட்டு தாக்குதல் நடத்தியபோது தாக்குதலுக்கு முகம்கொடுத்து தப்பியோடியபோது சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தரின் இறுதி ஊர்வலம் நேற்று பொலிஸ் 11

## ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் நீக்கம் உயர் நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல்

கொழும்பு, ஓக. 12

கடந்த 07ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை நீக்குவது தொடர்பான சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி நேற்று உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளர் ரேணுகா பெரேராவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனுபவித்து வரும் சிறப்புச் சலுகைகளை 11

## மண்கும்பானில் கரையொதுங்கிய ஆணின் சடலம்!

யாழ்ப்பாணம், ஓக. 12

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான் பகுதியில் ஆண் ஒருவரது சடலம் நேற்று கரையொதுங்கியுள்ளது.

குறித்த சடலமானது யாருடையது என இதுவரை 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் காற்றாலை மின் திட்டத்தை நிறுத்துமாறு வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஒக. 12

மன்னாரில் முன்னெடுக்க வுள்ள காற்றாலைத் திட்டத்தை நிறுத்தக் கோரியும், இல்மனைற் அகழ்வுக்கு எதிராகவும் மன்னா ரில் நடைபெறும் சத்தியாக்கிரக போராட்டத்துக்கு ஆதரவு தெரி வித்து வவுனியாவில் மனித சங்கிலி போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டத்துக்கு அண்மை யில் நேற்று காலை குறித்த போராட்டம் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரி வித்த போராட்டக்காரர்கள்-

நாட்டின் மீன்பிடி தொழில் மற்றும், பறவைகளின் பாதுகாப்பு சரணாலயம், இயற்கை காற்றின் வலு முதலானவற்றுக்கு பெயர் பெற்ற இடமாக மன்னார் விளங்குகிறது.

இந்த நிலையில் ஏகபோக இராட்சத பல்தேசிய கம்பனி களின் இலாப வேட்டையா லும், இலங்கை அரசாங்கங் களின் கையா லாகாத நிலை யாலும் அழிவை எதிர்நோக்கி உள்ளது மன்னார் தீவு. ஏற்கனவே உள்ள காற்றா லைகளால் மீன் கரைக்கு வரு வது குறைந்து விட்டது. மீன் இனப்பெருக் கம் குன்றிவிட்டது. காற்றா லைகளின் அமைப்பால் தரையில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்கள் வடிகாலமைப்பை மாற்றி வெள் ளப்பெருக்கு மற்றும் நிலத்தடி நீர் உவராதல் ஏற்படுத்தியுள்ளது.



காற்றாலைகளின் இரைச்ச லால் மன்னாருக்கு வலசைப் பறவைகளின் வருகை தடுக்கப் படுவதுடன் அவை பாதையை மாற்றவும் காற்றாடிகளால் இறக் கும் நிலையையும் ஏற்படுத்தி உள்ளது. இது மட்டுமின்றி மக் களின் வாழ்விலும் காற்றாலை களின் ஒலி மாசு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் மன்னார் மண் ணின் கீழ் இருக்கும் இல்மனைற், தோரியம் போன்ற கனிமவளங் கள் இன்றைய நவீன விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இரா ணுவ தேவைகளுக்காக உலக நாடுகளுக்கு தேவைப்படுகிறது. அதில் முதலீடு செய்வது பெரும் இலாபம் தரும் என்பதால் பல் தேசிய நிறுவனங்கள் முண்டிய டிக்கின்றன. மன்னாரில் நடை பெறவுள்ள இந்த அகழ்வு மன் னார் தீவையே மனித வாழ்வுக்கு உகந்ததாக இல்லாமல் செய்து விடும் அளவுக்கு ஆபத்தானது - என்று கூறினர்.

வவுனியா சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட் டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது. (அ)

# மன்னாரில் 9ஆம் நாளாக தொடர்ந்தது போராட்டம்

மன்னார், ஒக. 12

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி இரண்டாவது கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபு ரம் அமைக்கும் நடவடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தொடர்ச் சியாக மன்னார் பஜார் பகுதி யில் போராட்டம் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நேற்று 9ஆவது நாளாக முன்னெடுக்கப் பட்ட போராட்டத்துக்கு வலு சேர்க்கும் வகையில் பல கிராம மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கீளியன் குடியி ருப்பு, நடுக்குடா, கட்டுக்காரன் குடியிருப்பு, பருத்திப்பன்னை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு உள்ளிட்ட உள்ளிட்ட கிராம மக்களும் நேற்று 9ஆவது நாளாக இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு வழங்கினர். (அ)



# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியீட்டு விழா

ஒக்லாண்ட், ஒக. 12

நியூசிலாந்து, ஒக்லாண்ட் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ் வராவின் ஆறு நூல்கள் வெளியி டப்பட உள்ளன.

"தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்", "இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்", "ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும்", "முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்", "தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள்", "இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்" ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியீடு எதிர் வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது.

நியூசிலாந்து, ஒக்லாண்ட் மாநகரில் உள்ள மவுண்ட் ரோஸ்கில் போர் நினைவு மண்டபம், 13 வது மே சாலை, மவுண்ட் ரோஸ்கில், ஒக்லாந்து 1041 எனும் முகவரியில் உள்ள மண்டபத்தில் மாலை 6 மணி முதல் 8.30 மணி வரை நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வு சண். வேலுப் பிள்ளை தலைமையில் நடை பெற உள்ளது. இந்நூல் வெளி யீட்டு விழாவில் அறிமுக உரையை மேவின் கொன்ஸ் ரன்ரைன் உரையாற்றுவார். அத்துடன் நூல்களின் ஆய்வுரைகளை சிவசரவண பவன் சர்வேஸ்வரன், பூபால சிங்கம் பிரதீபன், கௌரிசங்கர் சுதந்திரபாலன், பிரேம்குமார் கந்தசாமி, திருமதி வித்தியா நந்தகுமார் மற்றும் திருமதி. தமிழினி வாமதேவன் ஆகியோர் வழங்குவார்கள்.

இறுதியான ஏற்புரையை நூல்களின் ஆசிரியரான ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார். (அ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 12

டான் தொலைக்காட்சி குழு மத்தின் ஓம் தொலைக்காட்சி நடத்தும் "சைவம் தழைத் தோங்க..." நிகழ்ச்சி இன்று இரவு 7 மணிக்கு நல்லூர் நட ராஜா பரமேஸ்வரி மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

திருமதி வாசஸ்பதி ரஜீந்தி ரன் நெறிப்படுத்தலில் மாணவி சிந்துபைரவி கோகுலன் தேவா ரத்தைத் தொடர்ந்து திருமதி தயானந்தன் விஜயகௌரியின் நெறியாள்கையில் இணுவில் மத்திய கல்லூரி மாணவியரான டிபானிக்கா தயானந்தன், சாருகா அன்ரன், நிஜா சுஜிதேவா, ஹர் னிகா தயானந்தன், பிரியங்கா கேதீஸ்வரன், கீர்த்திகா ஜெயக் குமார், பிரத்திகா கேதீஸ்வரன் ஆகியோரின் நடன நிகழ்வு அரங்கேறும்.

இதைத் தொடர்ந்து "சைவ களஞ்சியம்" விநாடி வினா போட்டி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறும். (ஐ)

* * * *

யாழ்ப்பாணம், ஒக. 12

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக் கம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறியாள்கையில் குழு இசை நிகழ்வில் சாரங்கம் இசை மன்ற மாணவர்களின் பாட்டு, வயலின்- கேதீஸ்வரன் வேலதீபன், மிருதங் கம் - முரளிதரன் சுலக்சன், தபேலா - நக்கீரன் கேதாரநாத் என்பன இடம்பெறும்.

தொடர்ந்து வயலின் இசை நிகழ்ச்சியில் இரட்டை வயலின்- ப. சியாம்கிருஷ்ணா, மிருதங் கம் - சு. கமலதாஸ் ஜெஞ்சிரா - அ. சண்முகப்பிரியன், முகர்சிங்- சு. நந்தகுமார் ஆகியோர் இசை வழங்குவர். (ஐ)

# விபத்துகள் ஏற்படும் அபாய நிலையில் மருதங்கேணி-புதுக்காடு பிரதான வீதி

வடமராட்சி, ஒக. 12

வடமராட்சி கிழக்கு மற்றும் பச்சிளைப்பள்ளி மக்களின் பிர தான போக்குவரத்து பாதை யாக காணப்படும் மருதங்கேணி - புதுக்காடு பிதான வீதி விபத் துகள் ஏற்படும் அபாயத்தில் உள்ளது.

கடந்த காலங்களில் சட்ட விரோத மண் அகழ்வு அதிக ரித்து காணப்படுகின்றது. சட்ட விரோதமாக அகப்படும் மண்ணை கடத்தல் கும்பல்கள் வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு விற்பனை செய்வதற்கு இந்த பிரதான பாதையையே பயன்படுத்தி வருகின்றன.

இதனால் கடந்த சில நாட் களாக வீதியோரம் அதிகளவாக மணல் பரவி இருப்பதை காணக்கூடியதாக இருந்தது.

மருதங்கேணி - புதுக்காடு பகுதியை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் முற்றுகை இடுவதை அறிந்த கள்ள மண் மாபியாக்கள் தாம் ஏற்றிச் சென்ற அனுமதி அற்ற மண்ணை வீதியோரங்களில் பறித்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் நேற்று காலை சுமார் 3 டிப்பர்களுக்கு அதிக மான மண் வீதியோரங்களில் பரவி காணப்படுவதால் விபத் துகள் ஏற்படும் அபாயத்தில் உள்ளதாக மக்கள் தெரிவித்தனர்

வீதியோரங்களில் காணப் படும் மண்ணை அகற்றும் பணிகளை கிளிநொச்சி வீதி அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது. (அ-05)

# முல்லைத்தீவில் யானை தாக்கி ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு, ஒக. 12

யானையின் தாக்குதலுக்கு இலக்கான ஒருவர் படுகாயம டைந்து யாழ். போதனா மருத் துமனையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட் டான் - கருவேலன்கண்டல் - மானுருவி பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சுந்தரம் சிவதாஸ் (வயது 51) என்பவரே படுகாயமடைந்தார்.

சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவரை யானை தாக்கியதில் அவர் படுகாயமடைந்தார். அவர், முல்லைத்தீவு மாவட்ட மருத் துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, இந்தப் பகுதியில் அடிக்கடி யானை தொல்லை இருப்பதாகவும் மின்வேலி அமைத்துத் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

யாழிலிருந்து சென்ற தபால் ரயில் பழுது

# 3 மணி நேர தாமதத்தின் பின்னர் பயணத்தை தொடர்ந்த பயணிகள்

யாழ்ப்பாணம், ஒக. 12

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு புறப்பட்ட தபால் ரயில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அருகில் இயந்திரக் கோளாறு காரணமாக பழுதடைந்தது.

அதன் காரணமாக கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் சுமார் 3 மணி நேர தாமதத்தின் பின்னரே தமது பயணத்தைத் தொடர்ந்தனர்

காங்கேசன்துறையில் இருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு புறப்பட்ட ரயில் கரடிப்போக்கு சந்திக்கு அருகில் இரவு 9.30 மணியளவில் பழுதடைந்தது.

பழுதடைந்த இயந்திரத்தை திருத்த முயன்று , அது பயனளிக்காத நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 12:30 மணியளவில் காங்கேசன்துறையில் இருந்து சென்ற மற்றுமொரு இயந்திரம் மூலம் ரயில் கொழும்பை நோக்கிப் புறப்பட்டது.

இதனால் பயணிகள் சுமார் 03 மணி நேர கால தாமதத்தின் பின்னரே தமது பயணத்தை தொடர்ந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.08.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஆளும் தரப்பை பிளவுபடுத்தும் அரசியல்

தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் முற்போக்கான பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி அரசாங்கத்தை அமைப்பதற்கு சஜித் பிரேமதாஸ தயாராக இருக்கிறாரென எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். தேசிய மக்கள் சக்திக்குள் முரண்பாடுகள் இருப்பதான ஒரு கதையை எதிரணியினர் அவ்வப்போது மறைமுகமாகக்கூற முற்படுகின்றனர். இதேபோன்று பிரதமர் ஹரிணியை நீக்கிவிட்டு அந்த இடத்தை ஜே. வி. பியின் வசமாக்கப் போவதான கதைகளையும் மகிந்த ராஜபக்ஷவின் அணியிலிருந்தவர்கள் கூறிவருகின்றனர். இதன் மூலம் ஜே. வி. பிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்து வருவதான ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முற்படுவது தெளிவாகத் தெரிகின்றது.

யுத்தத்துக்குப் பின்னரான தென்னிலங்கை அரசியலில், பிரதான கட்சிகளைப் பிளவுபடுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றும் ஓர் அரசியல் உத்தியே மேலாதிக்கம் பெற்றிருக்கிறது. மகிந்த ராஜபக்ஷவை வீழ்த்துதல் என்னுமடிப்படையில் ஆரம்பித்த அணியை உடைத்து - அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசியல் சதுரங்கமே தென்னிலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்துகிறது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் பலமான நிலையிலிருக்கும் தேசிய மக்கள் சக்திக்குள் பிளவுகளை ஏற்படுத்துவதன் ஊடாக ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று எதிரணியினர் எண்ணக்கூடும். அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் பிளவுகள் ஓர் உத்திதான். குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளில் இவ்வாறான உத்தி மேலாதிக்கம் பெற்றிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தியை அவ்வாறு உடைத்துவிட முடியாது என்று எவரும் வாதிட முடியாது. ஏனெனில் அவ்வாறான ஆரூடங்கள் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் கூறப்பட்டது. ஆனால், பின்னர் உடைக்கும் அரசியல் உபாயத்தின் மூலம்தான் ராஜபக்ஷக்களின் முடிவு மெதுவாக நகர்த்தப்பட்டது. இன்று ராஜபக்ஷவின் தரப்பிலிருந்தவர்கள் பல குழுக்களாகத்தான் இருக்கின்றனர். ஒருவேளை, ராஜபக்ஷ மீளவும் பலமடையும் சூழல் ஏற்பட்டால் அன்றி, அவர்கள் ஒன்றுபடப் போவதில்லை.

அரசியலில் பொது எதிரிக்கு எதிராகவே ஏனையோர் ஒன்றுபடுவர். தேசிய மக்கள் சக்தி தொடர்வது தங்கள் அனைவருக்கும் சிக்கல் என்று கருதும்போது - அதற்கான வாய்ப்புகள் முற்றிலும் சாதகமாக இருக்கும்போது மட்டும்தான் தென்னிலங்கையில் எதிரணிகள் ஒன்றுபடும். அடுத்த பிரச்னை, யாருடைய தலைமையில் ஒன்றுபடுவது? சஜித்தின் தலைமையிலா? சஜித் பிரேமதாஸவுடன் தற்போது சிலர் இருப்பதற்கு ஒரேயொரு காரணம், அவர்களுக்குச் செல்வதற்கு வேறு இடம் இல்லை என்பது மட்டும்தான். குறிப்பாக, முஸ்லிம் கட்சிகள் அதிகாரமின்றி இருப்பதில்லை. ஆனால், சஜித் பிரேமதாஸவை விடுத்து வேறு ஒருவர் இல்லாத காரணத்தால்தான் அவர்கள் சஜித்துடன் இருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தியை பிளவுபடுத்தும் சதி நகர்வுகளுக்கு எப்போதும் இடமிருக்கிறது என்பது ஜே. வி. பிக்கு தெரியாத ஒன்றல்ல - அதனை அவர்கள் எதிர்பார்த்துத்தான் இருப்பார்கள். இதன் காரணமாகவே கட்சிக்குள் ஜே. வி. பியின் பிடி இறுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் பிளவு நகர்வுகளை தடுக்க முடியுமென்று அவர்கள் நம்பலாம். இலங்கைத் தீவு என்னதான் முன்நோக்கி நகர்வதான தோற்றம் தெரிந்தாலும்கூட இலங்கைத்தீவின் மீதான வெளியாரின் தலையீடுகளும் அதில் ஏற்படும் திடீர் நெருக்கடிகளும் இலங்கை மீது எப்போது வேண்டுமானாலும் விழக்கூடிய கத்திகளாகவே இருக்கின்றன. இந்த நிலைமையில் பிளவுகளின் மூலமான ஆட்சி மாற்றங்களுக்கான வாய்ப்புகள் தவிர்க்கவே முடியாதவை. இதனை அறியாமல் இருக்குமளவுக்கு ஜே. வி. பியினர் அப்பாவிகள் அல்லர்.

# அநுர பதவியேற்று ஒரு வருடமாகியும் 40 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஏமாற்றம்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 12

ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருடமாகியும், சுமார் 40,000 வேலையற்ற பட்டதாரிகள் இன்னும் வேலைவாய்ப்பின்றி உள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

விசேட உரையொன்றினூடாக நேற்று அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் காலத்தில் கொள்கை அறிக்கையில் வேலைவாய்ப்பு குறித்த உறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் ஆட்சிக்கு வந்த பின் அவை நிறைவேற்றப்படவில்லை.

பட்டதாரிகளைப் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி, தமது வாக்குகளை அதிகரித்து வெற்றி பெற்றாலும், ஆளும் தரப்பைச் சேர்ந்த சகலரும் பட்டதாரிகள் விடயத்தில் இன்று கரிசனை செலுத்தத் தவறியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு அஞ்சியே அரசாங்கம் பட்டதாரி களுக்கு தொழில் வழங்காதிருக்கின்றதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பட்டதாரிகள் நாட்டின் வளங்கள் என்பதால், அவர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சி , தாழில் வழங்கி, அவர்களை பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# கிளிநொச்சி அரசாங்க அதிபராக முரளிதரன் நேற்று கடமையேற்பு

கிளிநொச்சி, ஒக. 12

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக சுப்பிரமணியம் முரளிதரன் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிளிநொச்சி மாவட்டபதில் அரசாங்க அதிபராக கடமையாற்றிய சுப்பிரமணியம் முரளிதரன் மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டு அவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று காலை மாவட்ட செயலக வளாகத்திலிருந்து மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட அவர் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

# போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 12

ஆனைக்கோட்டையில் 5 போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். (ஐ-05)

# வேகமாக பரவுகிறது எலிக் காய்ச்சல்

கொழும்பு, ஒக. 12

நாடளாவிய ரீதியில் எலிக்காய்ச்சல் பரவும் வீதம் தற்போது அதிகரித்துள்ளதாக பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் போதனா மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

எனவே சதுப்பு நிலங்கள் மற்றும் வயல் வெளிகளில் விளையாடும்போது சிறுவர்கள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்துரைத்த விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா, சிக்குன் குனியா மற்றும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக தெரிவித்தார்.


எனினும் சிறுவர்களுக்கு தற்போது பாடசாலை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதால் அவர்கள் அதிகமாக சதுப்பு நிலங்கள் உள்ளிட்ட பகுதிகளில் விளையாடக் கூடும் என அவர் கூறினார்.

அவ்வாறு செல்லும் போது பாதணிகளை அணிவிக்குமாறும் பெற்றோருக்கு விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

சதுப்பு நிலங்கள் மற்றும் வயல்வெளிகளில் விளையாடும் சிறுவர்களுக்கு, ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு காய்ச்சல், கண்கள் சிவத்தல் அல்லது மஞ்சள் நிறமாகுதல், சிறுநீர் மஞ்சள் நிறத்தில் வெளியேறுதல் மற்றும் வயிற்றுவலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனே மருத்துவரை நாட வேண்டும். குறித்த நோய் அறிகுறிகள் எலிகாய்ச்சலுக்கு வழிவகுக்கும் எனவும் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை ஆரம்பத்திலேயே கவனிக்காமல் விட்டால் அது சிறுநீரகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்று வீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். மதிப்பு கூடும் நாள்.

**இடபம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். உங்களின் அணுகுமு றையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக் குள் இருந்த பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த் திருந்த தொகை கைக்கு வரும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சி வசப் பட்டுகத்தாதீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்து கொடுத்து போவது நல்லது.

**சிம்மம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். தாயாரின் உடல்நலம் சீராகும். கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும்.

**கன்னி**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**துலாம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நட்பால் ஆதாயம் உண்டு.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தாயாருக்கு மருத் துவசெலவுகள் அதிகமாகும்.

**தனுசு**
அரசால் ஆதாயம் உண்டு. உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். துணிச் சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புது வாக னம் வாங்குவீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் விலகும். மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். செலவுகளை குறைக்க திட்டமிடுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப் பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். மற்ற வர்களுக்காக நியாயம் கேட்கப் போய் பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**மீனம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல் லும். பிள்ளைகளின் பிடிவாதத்தை அனுசரணை யான பேச்சால் சரி செய்யுங்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள்.

# யாழில் கத்திக்குத்து, ஒருவர் மரணம்! இரு பெண்கள் உட்பட நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ்ப்பாணத்தில் கத்திக் குத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

புங்குடுதீவு முதலாம் வட் டாரத்தை சேர்ந்த அற்புதராசா அகிலன் (வயது- 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் மீது கத்திக் குத்து தாக்குதலை மேற் கொண்ட நபரை பிடிக்க முயன்ற இரு பெண்கள் உள் ளிட்ட நால்வர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

*மிருசுவில் பகுதியில் ஏ - 9 வீதியில்*

# நான்கு வாகனங்கள் மோதி விபத்து ஒருவர் உயிரிழப்பு, மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ்ப்பாணம் - கொடி காமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மிருசுவில் பகுதியில் ஏ - 9 வீதியில் நேற்று முன் தினம் இரவு 07. 00 மணிய ளவில் இடம்பெற்ற விபத்தில் நான்கு வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதியதில் 35 வயது நபர் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சிப் பகுதியிலி ருந்து யாழ். நோக்கி வந்த காரும் யாழில் இருந்து கிளி நொச்சி நோக்கிப் பயணித்த டிப்பர், கூலர் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன ஒன்றோடு ஒன்று மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்துக்குள்ளான வாக னங்கள் கடுமையாக சேதம



டைந்ததுடன் மூவர் படுகாயம டைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அதில் ஒரு வர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவம னைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (எ)

# வவுனியா பிரதேச சபையால் வாராந்த சந்தை முயற்சியாளர்களை பதிவு செய்ய கோரிக்கை

வவுனியா, ஓக. 12

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் வாராந்த சந்தை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் தொழில் முயற்சியா ளர்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய் வதற்கான பதிவுகளை மேற் கொள்ளுமாறு தவிசாளர் பா. பாலேந்திரன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி யிலிருந்து ஒவ்வொரு ஞாயிற் றுக்கிழமைகளிலும் வாராந்த சந்தை ஒன்றை நடத்த திட்ட மிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தையில் எமது பிரதேச முயற்சியாளர்களின் விவசாயத்துறை, கைத்தொழில் துறைசார் உற்பத்திப்பொருட் களை விற்பனை செய்ய முடி யும். இதனூடாக உற்பத்தியா ளர்களின் இடைத்தரகர்களுக் கான செலவீனம் குறைக்கப்படு வதுடன் எதிர்காலத்தில் நுகர் வோரின் தேவைக்கேற்றவாறு உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு அவர்கள் தமது பொருளாதாரத்தில் முன்னேற் றமடைவதுடன் ஏனையவர்க ளுக்கும் வேலைவாய்ப்பை வழங்க முடியும்.

எனவே, பயன்பெற விரும்பும் முயற்சியாளர்கள் நாளை 13 ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னதாக "வவு னியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெரியகுளம் வீதி, நெளுக் குளம் வவுனியா" எனும் அலு வலக முகவரிக்கு நேரடியாக தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நேரத்தில் 024 2225737 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தமது முன்பதிவு களை மேற்கொள்வதுடன் மேலதிக விவரங்களையும் பெற் றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-10)

# நீர்வேலியில் சுக்கிர வாரச் சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந் தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 34 ஆவது சொற்பொழிவு கோவில் சண் முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜ லிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இரா ஜேந்திர சுவாமிநாதக்குருக்க ளின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் "சுக்கிரனுபதேசப் படலம்" எனும் தலைப்பில் சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் க. கைலநாதனும் நிகழ்த்துவர்.

சிறப்புச்சொற் பொழிவும் சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதி காசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்பட வுள்ளன. (எ)

# நல்லை ஆதீனத்தில் தெய்வீகக் கலை அர்ச்சனை


யாழ்ப்பாணம், ஓக. 12

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வரு டாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்ட பத்தில் கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் தினமும் காலை 10. 00 மணிக்கு "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வை நடத்தி வருகிறது. அந்தவகையில் இன்று செவ்வாய்க்கிழமை இணுவில் பரராஜசேகரப்பிள் ளையார் தேவஸ்தான பஜனைக் குழுவினரின் பஜனை நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வி சீர்திருத்தங்கள் 2026 முதல் நடைமுறைக்கு!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, ஒக. 12

**பிள்ளைகளிடம் விழுமியங்களை வளர்ப்பதும், பாடசாலை கல்வியை இடையில் நிறுத்திய பிள்ளைகளை தொழிற் கல்விக்கு வழிநடத்துவதும் அதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பை உறுதி செய்வதும் கல்வி சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கமாகும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடலொன்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையிலான ஆயர்களுடன் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், பிரதமர் ஹரிணி அமரசூரியவின் பங்குபற்றுதலுடன் கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதமரும் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவவும் கல்வி சீர் திருத்தங்கள் குறித்த முழுமையான விளக்கத்தை முன்வைத் தனர்.

எல்லா பிள்ளைகளுக்கும் உயர்தரமாகக் கருதப்படும் வேலைகளில் ஈடுபட வாய்ப்பு கிடைப்பதில்லை என்பதுடன், கடற்றொழில், மின் கைத்தொழில் துறை மற்றும் வாகன பழுதுபார்ப்பு போன்ற தொழிற் கல்வித் துறைகளின் பெறுமதியை விளக்கி, அத்துறைகளில் நிபுணர்களை உருவாக்குவதற்கான அடித்தளத்தை பாடசாலைக்குள்ளேயே எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து விசேட கவனம் செலுத்தப் பட்டது.

இதன்போது ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் பாடத் துறை நிபுணர்களைத் தேர்ந்தெடுப்பதன் முக்கியத்துவம், அந்த தேர்வு செயல்முறையை முறைப்படுத்துதல் மற்றும் பிள்ளைகளுக்கு சிறந்த தரமான கல்வியை வழங்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை ஆயர் பேரவையின் தலைவர் ஆயர் ஹரால்ட் அன்ரனி ஆண்டகை உள்ளிட்ட ஆயர்கள் கலந்துகொண்டனர். (அ)

# பிரதியமைச்சர் அருண் ஜயசேகரவை தற்காலிகமாக பதவி நீக்க வேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஒக. 12

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவை தற்காலிகமாவாது பதவிநீக்கம் செய்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சுயாதீன விசாரணைக்கு இடமளித்து நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி இருக்கிறது. அதனை மேற்கொள்ளும் என நாங்கள் நம்புகிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியை கண்டுபிடித்து சட்டத்துக்கு முமன் நிறுத்துவதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதாகவும் தேர்தல் காலத்தில் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதியாகும். இதனை நாங்களும் தெரிவித்தோம். தற்போதுள்ள அரசாங்கமும் தெரிவித்திருந்தது. என்றாலும் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது அதிக நம்பிக்கைவைத்து ஆட்சியில் அமர்த்தினார்கள். அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நெருங்கும் நிலையில் இந்த தாக்குதல் தொடர்பான பாரிய விடயங்கள் எதனையும் இதுவரை வெளிப்படுத்துமுடியாமல்போயிருக்கிறது.

அதேநேரம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலத்தில் கிழக்குமாகாண இராணுவக் கட்டளை தளபதியாக இருந்த அருண ஜயசேகர, தற்போது இந்த அரசாங்கத்தின் பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருக்கிறார். இவர் இந்த தாக்குதல் தொடர்பில் பிரதான சாட்சியாளர். அப்படியான ஒருவரை பொறுப்பு வாய்ந்த பதவியில் வைத்துக் கொண்டு, மேற்கொள்ளப்படும் விசாரணையில் சுயாதீனத்தன்மையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

அதனால் பாதுகாப்பு அருண ஜயசேகர பிரதி பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து விலகி, அரசாங்கத்தின் கௌரவத்தை பாதுகாத்து, உயிர்த்த ஞாயிறுதாக்குதல் தொடர்பான விசாரணையை நடவடிக்கைகளின் சுயாதீனத்தை பாதுகாப்பார் என நாங்கள் நம்புகிறோம். அவ்வாறு இல்லாமல் அரசாங்கம் தொடர்ந்தும் அவரை இந்த பதவியில் வைத்துக் கொண்டிருக்குமானால், அது அரசாங்கத்துக்கு தெரிவிக்கப்படும் பாரிய குற்றச்சாட்டாக அமையும்-என்றார். (அ)

# மாகாண சபைத் தேர்தலில் அரசு வெளிப்படையின்றி ஏமாற்றுகிறது

## காவிந்த ஜயவர்தன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 12

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் நாட்டு மக்களை ஏமாற்றுகிறது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. இவ்விடயத்தில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காணவேண்டிய பொறுப்பு ஆட்சிக்கு வரும் சகல அரசாங்கங்களுக்கும் உண்டு. சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதை விடுத்து பிரச்னைகளை தீவிரப்படுத்தும் வகையில் தான் செயற்பட்டன.

இவ்வாறான பின்னணியில் இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் பொருட்டு மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. தேர்தல் முறைமை காரணமாக மாகாணசபைத் தேர்தல் பல ஆண்டுகாலமாக காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்துவதா அல்லது புதிய தேர்தல் முறையில் நடத்துவதா என்பது பாரியதொரு பிரச்னையாக காணப்படுகிறது. இந்த பிரச்னைக்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வு காண வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்ச்சியாக வலியுறுத்துகின்ற நிலையில் இதுவரை உரிய தீர்வுகள் ஏதும் எட்டப்படவில்லை.

மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தியபோது அதற்கு எதிராக நாட்டில் கடுமையான பிரசாரங்களை மக்கள் விடுதலை முன்னணி தோற்றுவித்து மாகாண சபை முறைமை பற்றி பெரும் பான்மை மக்கள் மத்தியில் தவறானதொரு நிலைப்பாட்டை ஏற்படுத்தியது.

இவ்வாறான பின்னணியில் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதாக தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது. இருப்பினும் இதுவரையான காலப்பகுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் நாட்டு மக்களை ஏமாற்றுகிறது. இவ்விடயத்தில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை- என்றார்.

## கைக்குண்டு மீட்பு

கொழும்பு, ஒக. 12

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்று மீன் பிடி வலையில் சிக்கி கண்டெடுக்கப்பட்டதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜாங்கனய குளத்தில் இருந்து யாய ஹதர பகுதி விவசாயத்துக்கு தண்ணீர் வழங்கும் பிரதான கால்வாயில் மீன்பிடித்தபோது, வலையில் ஏதோ சிக்கியதை கவனித்த மீனவர்கள் அது கைக்குண்டு என சந்தேகித்து 119 அவசர எண்ணுக்கு அறிவித்திருந்தனர்.

உடனடியாக தம்புத்தேகம பொலிஸார் அனுராதபுரத்தில் உள்ள உலுக்குளம பொலிஸ் சிறப்புப் படையின் வெடிகுண்டு செயலிழக்கும் பிரிவை அழைத்துள்ளனர்.

சம்பவ இடத்தை ஆய்வு செய்த சிறப்புப் படை, அது கைக்குண்டு என்பதை உறுதிப்படுத்தி, அதை இராஜாங்கனய யாய துன், "லுனுஓயா"வின் வெறிச்சோடிய பகுதிக்கு கொண்டு சென்று செயலிழக்கச் செய்துள்ளனர். (அ)

# மொரகல்ல கடலில் மூழ்கி வெளிநாட்டுப் பெண் பலி!

கொழும்பு, ஒக. 12

களுத்துறை, அளுத்கமை, மொரகல்ல கடலில் மூழ்கி வெளிநாட்டுப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் வியட்நாம் நாட்டைச் சேர்ந்த 48 வயது டைய பெண் ஆவார்.

சம்பவத்தன்று, வெளிநாட்டுப் பெண் மேலும் சில நபர்களுடன் இணைந்து மொரகல்ல கடலில் நீராடிக்கொண்டிருந்தபோது திடீரென நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார்.

பின்னர், நீரில் மூழ்கி காணாமல்போன வெளிநாட்டுப் பெண்ணின் சடலம் பெந்தர கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சுற்றுலா வருவாய் இரட்டிப்பு

கொழும்பு, ஒக. 12

இலங்கைக்கு இந்த ஆண்டில் இதுவரை 1.4 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் குறிக்கிறது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜூலை மாத சுற்றுலா வருவாய் 318.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது. இது ஜூலை 2024 இல் பதிவு செய்யப்பட்ட 151.1 மில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகமாகும். இவ் வருவாய் அதிகரிப்பானது சுற்றுலாதுறைக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் படி, ஆண்டுக்கு ஆண்டு சுற்றுலா வருவாயானது 7.8 வீத அதிகரிப்பை கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகரிடம் சமர்ப்பிப்பது தாமதம்

கொழும்பு, ஒக. 12

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவின் வருகையின் காரணமாக, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகராவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறையாக சமர்ப்பிப்பது தாமதமாகியுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

சபாநாயகர் விக்ரமரத்ன தற்போது கொழும்புக்கு வெளியே உத்தியோகபூர்வ பணிகளில் ஈடுபட்டுள்ளதால், திட்டமிடப்பட்ட கையெழுத்திடும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

இருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக வட்டாரங்கள், இந்தப் பிரேரணை இன்று நண்பகலில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக உறுதிப்படுத்தின. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# விவசாயிகளின் பிரச்னைகள் வெகுவிரைவில் தீர்க்கப்படும்

## பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன



கொழும்பு, ஓக. 12

நெல் கொள்வனவு உள்ளிட்ட பல பிரச்னைகள் விவசாயிகள் மத்தியில் தற்போது எழுந்துள் ளதாகவும் அவற்றுக்கு விரை வில் தீர்வு காணப்படும் என்றும் விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-நெல் களஞ்சியசா லைகளில் உள்ள நெல் விடுவிக் கப்படும். நெல்லுக்கு உரிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் போராட்டம் நடத்த தேவை யில்லை. பெரும்போகத்தில் விவசாயிகளுக்கான அனைத்து பிரச்னைகளும் நிவர்த்திக்கப்ப டும்-என்றார். (அ)

# செம்மணி விவகாரத்தில் அரசு தலையிடவில்லை!

## அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு



கொழும்பு, ஓக. 12

**செம்மணி விவகாரம் நீதித்துறையின் கீழ் வருகின்றது. இதில் அரச தலையீடு எதுவுமில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங் கையை பிரதிநிதித்துவம் செய் யும் குழுவுக்கு தலைமை தாங்க வுள்ள வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் நிலைப்பாட்டை முன்வைத்து உரையாற்றவுள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற் றது முதல் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் சமர்ப் பிக்கப்படும் தீர்மானங்கள் கடு மையானவையாக காணப்ப டாத நிலை காணப்படுகின்றது என தெரிவித்துள்ள அவர், பொறுப்புக்கூறலுக்கு தீர்வை காண்பதற்காக உள்நாட்டு பொறி முறையை வலுப்படுத்துவதற் காக அரசாங்கம் பல நடவடிக் கைகளை எடுத்துள்ளது. அரசி யல் தலையீடுகளை தவிர்ப்ப தற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என தெரிவித் துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி சுயாதீன வழக்குரைஞர் அலுவலகத்தை ஏற்படுத்துவது உள்நாட்டு பொறிமுறை குறித்து சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை மேலும் அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் சுயாதீன வழக்கு ரைஞர் அலுவலகத்தை ஏற்ப டுத்துவது குறித்து அர்ப்பணிப் புடன் உள்ளோம். எதிர்காலத் தில் இதற்கான சட்ட நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

செம்மணி மனித புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை அவசியம் என்ற வேண்டு கோள்கள் குறித்து பதிலளித் துள்ள வெளிவிவகார அமைச் சர், செம்மணி விவகாரம் நீதித் துறையின் கீழ் வருகின்றது. இதில் அரச தலையீடு எதுவு மில்லை என குறிப்பிட்டார்.

மன்னார், மாத்தளையிலும் மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை அகழ்வது விசாரணைகள் குறித்த உரிய நடைமுறைகளுக்கு அரசாங் கம் அனுமதியளித்துள்ளது. இந்த விடயங்க ளில் நாங்கள் வெளிப்படையாக உள்ளோம் என அவர் தெரிவித்தார். (அ)

# அனைத்து மாகாணங்களிலும் குற்ற விசாரணைப் பிரிவுகள்!

## பதில் பொலிஸ் மாஅதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 12

அனைத்து மாகாணங்களி லும் குற்ற விசாரணை பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களை தடுக்கும் விசேட நடவடிக்கையின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன், பொலிஸ் உத்தி யோகத்தர்களால் பொதுமக்க ளுக்கு இழைக்கப்படும் குற்றங் கள் தொடர்பில் அறிவிப்பதற் காக விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார். (அ)

# முகாம் வளாகத்துக்குள் அனுமதியின்றி நுழைந்தோரை விரட்டியபோது தப்பிச்சென்றவர் குளத்தில் மூழ்கி மரணம்!

## முத்துஐயன்கட்டு விவகாரம் குறித்து பொலிஸ் ஊடகப்பிரிவு அறிக்கை

கொழும்பு, ஓக. 12

முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு பகுதியிலுள்ள குளத்திலி ருந்து சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட் டுள்ளது.

குறித்த அறிக்கையில் இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 07ஆம் திகதி முல் லைத்தீவு பொலிஸ் அத்தியட் சகர் பிரிவிற்குட்பட்ட ஒட்டு சுட்டான் பொலிஸ் நிலையத் தின் சிவநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள 12ஆவது சிங்கப் படையணி முகாமை அப்புறப் படுத்துவதற்கு சில நாட்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது 07ஆம் திகதி இரவு வேளையில் அகற்றப் பட்ட இரும்பு மற்றும் வெளிப் புறப் பொருட்களை எடுத்துச் செல்லதற்காக அதன் முகாம் வளாகத்தினுள் அனுமதியின்றி நுழைந்த 5 பேரை விரட்டிய டிப்பதற்காக முகாமிலுள்ள உத் தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

அதில் தப்பிச்செல்ல முயன்ற ஒருவர் முத்தையன் கட்டு குளத்தில் மூழ்கி உயிரி ழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் உத்த ரவுக்கமைய பொலிஸ் விசேட குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி நபர்கள் முகாம் வளாகத்தினுள் நுழைந்தபோது முகாமிலுள்ள உத்தியோகத்தர் கள் அவர்களைக் விரட்ட முற் பட்டபோது உள்ளே நுழைந்த வர்கள் தாக்கப்பட்டமை தெரியவந்ததன் காரணமாக சிப்பாய் ஒருவரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் முகாமுக்குள் நுழைந்து திருட்டுச் சம்பவத்தை மேற்கொள்வதற்காக இக் குழு வுக்கு உதவிய மேலும் இரண்டு சிப்பாய்களும் ஒட்டுச்சுட்டான் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மேலும் அவர்களை 09.08.2025 அன்று முல்லைத் தீவு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பின் னர் மூன்று சந்தேக நபர்களை யும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இறந்தவரின் உடல் பிரேத பரிசோதனை மேற்கொள்வதற் காக யாழ்ப்பாணம் வைத்தியசா லையில் வைக்கப்பட்டுள்ளது டன் சடலம் தொடர்பாக வெளிப்படையான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இச் சம்ப வம் தொடர்பாக விசாரணை கள் எந்தவித செல்வாக்கும் இல் லாமல் வெளிப்படையாகவும் பாரபட்சமின்றியும் நடத்தப் பட்டு வருகின்றன.

மேலும் ஒட்டுசுட்டான் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையின ரும் இணைந்து அப்பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப் பிட்டுள்ளது. (அ)

# ரயில் பாதைகளில் சிசிரிவி கமெரா ஆய்வு செய்த ரயில் திணைக்களம்

கொழும்பு, ஓக. 12

காட்டு யானைகள் ரயில்க ளில் மோதுவதைத் தடுக்க, முக் கிய ரயில் பாதைகளில் பொருத் தப்பட்டுள்ள சிசிரிவி கமெரா அமைப்பை இலங்கை ரயில்வே திணைக்களம் ஆய்வு செய்தது.

நேற்று முன் தினம் நடத் தப்பட்ட ஆய்வுச் சுற்றுப் பயணத்தில் ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜெய சுந்தர, திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளுடன் கலந்து கொண்டார்.

யானைகள் அடிக்கடி கடக் கும் அபன்பொல-காசிகோட் ரயில் சுரங்கப்பாதைக்கு அருகிலும், யானைகள்-ரயில் மோதல்களுக்கு பெயர் பெற்ற கல் ஓயா மற்றும் மின்னேரியா போன்ற பகுதிகளிலும் இந்த கமெரா அமைப்பு சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது.

இந்த அமைப்பு 24 மணி நேரமும் இயங்குகிறது மற்றும் சூரிய சக்தி பனல்களால் இயக் கப்படுகிறது.

கமெராக்களில் பதிவான காட்சிகளின் அடிப்படையில், தண்டவாளங்களுக்கு அருகில் யானைகள் கண்டறியப்ப டும்போது, அனுராதபுரத்தில் உள்ள முக்கிய ரயில்வே செயல்பாட்டு மையத்துக்கு சமிக்ஞைகளை அனுப்பு ஜி.பி.எஸ் அடிப்படையிலான எச்சரிக்கை அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது.

பின்னர் தண்டவாளங்களில் யானைகள் இருப்பது குறித்து ரயில் ஓட்டுநர்களுக்கு நிகழ் நேரத்தில் தெரிவிக்கப்படும். இதனால் அவர்கள் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

இந்த விஜயத்தின்போது, ரயில்வே பொது முகாமையா ளர் தம்மிக ஜெயசுந்தர கூறுகை யில்-ஒரு கமெராவை நிறுவுவ தற்கு அண்ணளவாக ரூ.20,000 செலவாகும்.

நன்கொடையாளர்கள் பங்க ளிக்கத் தயாராக இருந்தால், ரயில் பாதைகளில் யானைகள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் கூடுதல் கமெராக் களை நிறுவுவதன் மூலம் இந்த அமைப்பை விரிவுபடுத்த முடியும்-என்றார். (அ)

# இளைஞர் கழகங்களை முன்னைய அரசுகளே அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்தின!

## ரணிலைச் சாடுகின்றார் எரங்க குணசேகர

கொழும்பு, ஓக. 12

தேசிய இளைஞர் மன்றம் மற்றும் இளைஞர் கழகங்களை, முந்தைய அரசாங்கங்களே அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தியதாக இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னதாக, இளைஞர் கழகங்களை தற்போதைய அரசாங்கம், அரசியலுக்காக பயன்படுத்தக்கூடாது என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்மழிரமசிங்க தெரிவித்திருந் தார்.

இந்த கருத்துக்களுக்கு பதி லளிக்கும் வகையிலே, இளை ஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர இந்த விடயத்தை தெரிவித்துள் ளார்.

அத்துடன், கடந்த ஜனாதி பதித் தேர்தலின்போது, தேசிய இளைஞர் மன்றத்திலிருந்து பல மில்லியன் ரூபாய்கள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பிரசாரத்துக்காக செலவிடப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரசாரத்துடன் இணைந்த இசை நிகழ்ச்சிகளுக்கு 536 மில்லியன் ரூபாய் செலவிடப் பட்டதாகவும், கணக்காய்வா ளர் நாயகத்தின் அறிக்கையில் 68 மில்லியன் ரூபாய் மோசடி செய்யப்பட்டமை தெரியவந் துள்ளதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். 2024 ஆம் ஆண்டு இலங்கை இளை ஞர் கழகங்களின் சம்மேளனத் தின் செயலாளராக தரிந்து நவீன் செயற்பட்டு வந்த நிலை யில், பாலித ரங்கே பண்டார வால் அவர் கலகெதரவுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராகவும் நியமிக் கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சம்மேள னத்துக்கான நிதி, அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு மாற்றப் பட்டது.

அரசாங்கம் தற்போது 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுக ளில் இளைஞர் சங்கங்களை நிறுவி, மாவட்ட மாநாடுகளை நடத்தியுள்ளதுடன் எதிர்வரும் 12 ஆம் திகதி தேசிய இளைஞர் மாநாட்டை நடத்துவதற்கு திட் டமிட்டுள்ளது. இந்தநிலையில், எதிர்க்கட்சித் தலைமையின் கட்டுப்பாட்டை நாடும் ரணில் விக்கிரமசிங்க, சில அரசியல்வா திகளுக்கு எதிரான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளி லிருந்து கவனத்தைத் திசைதி ருப்புவதற்கு முயற்சிப்பதாகவும் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர குற்றம் சாட்டியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிகமாக கைவிடப்பட்டது வைத்தியர்களின் போராட்டம்!

## சுகாதார அமைச்சருடனான சந்திப்பை அடுத்து

கொழும்பு, ஓக. 12

**அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் முன்னெடுக்கவிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.**

இடமாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நாடளாவிய ரீதியில் நேற்று பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க திட்டமிட்டிருந்தனர்.

தங்களின் கோரிக்கைகள் தொடர்பாக நேற்று காலை 8.00 மணிக்குள் தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாக அவர்கள் அறிவித்திருந்தனர்.

இந்தநிலையில் சுகாதார அமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து பணிப்புறக்கணிப்பு தீர்மானம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாகக் குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## தன்னைத்தானே சுட்டுக்கொண்ட உதவி பொலிஸ் பரிசோதகர் பலி!

கொழும்பு, ஓக. 12

வீரகுள பொலிஸ் நிலையத்தில் கடமைப்புரியும் உதவி பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர் தனது கடமை நேரத் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

(அ)

## உயர்ந்த வாகன விலை கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை!

கொழும்பு, ஓக. 12

உலக வங்கியின் வாகன விலை நிலை குறியீட்டின்படி, 2021 ஆம் ஆண்டில் வாகனக் கொள்வனவில் உலகின் மூன்றாவது அதிக விலையை கொண்ட நாடாக இலங்கை தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த குறியீட்டில் இலங்கையின் மதிப்பெண் 175 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது வாகன விலைகள் உலகளாவிய சராசரி அளவுகோலான 100 ஐ விட இலங்கையில் விலை 1.75 மடங்கு அதிகமாகும்.

இதில் சிங்கப்பூர் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் முதல் 2 இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## ரூ.50 லட்சம் பெறுமதியான அம்பருடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 12

அம்பரை (திமிங்கல வாந்தி) வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் திவுலபிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திவுலப்பிட்டிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், திவுலபிட்டிய - நீர்கொழும்பு வீதியில் உள்ள போமுகம்மன பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரின் வசம் இருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 1 கிலோ 200 கிராம் அம்பர் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அதன் பெறுமதி 50 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் வத்துருகம, கிரிந்திவெல பகுதியைச் சேர்ந்த 44 வயதானவர் என தெரியவந்துள்ளது.

(அ)

## பொரளையில் துப்பாக்கிச் சூடு மூவர் கைது

கொழும்பு, ஓக. 12

பொரளை, சஹஸ்புர சிறிசர உயன அடுக்குமாடி குடியிருப்புக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த மூன்று சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் பொரளை மற்றும் தெமட்டகொடவைச் சேர்ந்த 24,25 மற்றும் 40 வயதானவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த ஒரு சந்தேக நபர் முன்னதாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மூன்று நாள் தடுப்புக் காவலில் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு நபர்கள் குறித்த துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றதுடன், இதில் காயமடைந்த ஐந்து பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்தனர்.

இதேவேளை, காயமடைந்த மூவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக சுமார் 10 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாரவில கொலைக்கு பொலிஸ் துப்பாக்கி!

கொழும்பு, ஓக. 12

மாரவில பகுதியில் அண்மையில் பெண்ணொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில், கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்திலிருந்து திருடப்பட்ட கைத்துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர் எனக் கூறப்படும் சுத்தி என்ற வசந்தி சதுராணி எனப்படும் பெண், மாரவில - மரத பகுதியில் கடந்த ஜூலை 22 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதற்கு முந்தைய தினத்திலேயே கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் சார்ஜன்ட் ஒருவரால் அந்த பொலிஸ் ஆயுதக் களஞ்சியத் திலிருந்து துப்பாக்கியொன்று திருடப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணையின்போது, மாவத்தகம அமில என்ற நபருக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு தாம் அந்த துப்பாக்கியை வாடகைக்கு கொண்டுத்ததாக குறித்த சார்ஜன்ட் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தநிலையில், கொழும்பு - டி.ஆர். விஜேவர்தன மாவத்தை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மத்திய பிராந்திய குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகளால் கடந்த 7 ஆம் திகதி குறித்த துப்பாக்கி மீட்கப் பட்டது.

துப்பாக்கி திருடப்பட்ட மறுநாளே இந்த கொலை இடம்பெற்றுள்ள நிலையில், அந்த துப்பாக்கியே மாரவில கொலைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கக்கூடிய தகவல்கள் விசாரணைகளில் வெளியாகியுள்ளன.

இந்த அதிகாரி திட்டமிட்ட குற்றக் கும்பல்களுக்கு பொலிஸ் துப்பாக்கிகளை வழங்கியிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளதால் அது தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

## மலையக மக்களின் தேவைகளை போராடி பெற வேண்டிய நிலைமை

### பழனி திகாம்பரம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 12

அரசியல் பலம் இருந்தலே அரசாங்கத்திடமே பேரம் பேசலாம் எனவும் மலையக மக்களின் தேவைகளை போராடியே பெற வேண்டும் எனவும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் தொழிலாளர் தேசிய முன்னணியின் வட்டார இளைஞரணி அமைப்பளர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய முன்னணியின் நுவரெலியா மாவட்டத்திற்கான அமைப்பளர்களுக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இதன்போது 127 வட்டாரங்களுக்கான 440 அமைப்பளர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

பிரதான அமைப்பாளர்கள், வட்டார அமைப்பாளர்கள், இளைஞரணி அமைப்பாளர்கள், வாக்களிப்பு நிலைய அமைப்பாளர்கள் நியமனங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

அக்கரபத்தனை ஹோல்புறூக் பகுதியைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர் முருகையா கேதீஸ்வரன் தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து கொண்ட நிலையில் அவர் அக்கரபத்தனை பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

உப தலைவர்களாக இராமலிங்கம் விஜயவீரன், சிவகுமார் சுரேஸ், பெருமாள் ரவீந்திரன், பெருமாள் தியாகராஜா ஆகியோரும், உப செயலாளர்களாக பெரியசாமி செந்தில்குமார், பொறியியலாளர் சுரேஸ் குமார் பிரஜீவன், தங்கவேல் சதானந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்ட அதேவேளை உதவி தேசிய அமைப்பாளராக செல்லதுரை ஜெகநாதன் நியமிக்கப்பட்டார்.

(அ)

## முன்னணி மதுபான நிறுவனத்தின் போத்தலில் தண்ணீர் கலந்து மோசடி

கொழும்பு ,ஓக. 12

முன்னணி மதுபான நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் மதுபானப் போத்தல்களில் தண்ணீரை கலந்து விற்பனை செய்த மோசடியை சட்டத்தின் முன்நிறுத்த மதுவரி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த மோசடியாளர்கள் மதுபான போத்தல்களின் மூடிகளை மிகச் சூட்சுமமாக அகற்றி, அவற்றில் தண்ணீரை கலந்து, மூடிகளை மீண்டும் இணைத்து விற்பனை செய்திருப்பது தெரியவந்துள்ளது.

மதுவரி அதிகாரிகள் இது போன்ற 33 மதுபான போத்தல்களை கையகப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் மதுவரி ஆணையர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, அந்த மதுபானச்சாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(அ)

## புலமைப்பரிசில் பரீட்சை மதிப்பீட்டுப்பணி ஆரம்பம்

கொழும்பு, ஓக. 12

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று முன் தினம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, பரீட்சைக்கான முதற்கட்ட மதிப்பீடுகள் நேற்று ஆரம்பமாகின என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி வினாத்தாள் திருத்தும் செயற்பாடுகள் ஒகஸ்ட் 22 தல் 27 வரை 43 நியமிக்கப்பட்ட மையங்களில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்குள் பரீட்சை முடிவுகளை வெளியிட பரீட்சைத் திணைக்களம் இலக்கு வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

## தேசிய பூங்காக்களை பார்வையிட இணையத்தின் ஊடாக பற்றுச்சீட்டு

கொழும்பு, ஓக. 12

தேசிய பூங்காக்களை பார்வையிடுவதற்காக நேற்று முன் தினம் முதல் இணையத்தின் ஊடாக பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியும் என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக இந்த பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

கவுடுல்ல தேசிய பூங்காவை பார்வையிடுவதற்காக நேற்று முன் தினம் நீண்ட வரிசை காணப்பட்டதால், சுற்றுலாப் பயணிகள் அசௌகரிங்களுக்கு உள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், குறித்த அசௌகரியங்களை குறைத்துக்கொள்ளும் நோக்கில் இணையத்தின் ஊடாக பற்றுச்சீட்டுகளை விநியோகிக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு நிதி உதவிகளுடன் கிழக்கில் அபிவிருத்தி திட்டங்கள்



காத்தான்குடி, ஓக. 12

மட்டக்களப்பு காத்தான்குடி, மண்முனைப்பற்று பிரதேசங்களில் நடைபெறவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையில் காத்தான்குடி நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

காத்தான்குடி நகர சபை, மண்முனைப்பற்று பிரதேச சபை ஆளும் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்ட இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப் பட்டன.

இதன்போது, வீதி அபிவிருத்திப் பணிகள், உள்ளூர் சுற்றுலாத்துறையை முன்னேற்றுதல், கல்வி மேம்பாடு, பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல், இளைஞர்களுக்கான பயிற்சிகள் மற்றும் தொழில்வாய்ப்புகள், பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் தொழில்வாய்ப்புகளுக்கான பயிற்சிகள், பாரம்பரியமாக நடைபெற்று வந்த வேலைத்திட்டங்களை மீளமைத்தல், விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி, மீனவர்களின் பிரச்னைகள், வர்த்தகர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல் நடத்தப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் எடுக்கப்பட்டன.

இந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த, விசேட குழுக்களும் நியமிக்கப்பட்டன. இதன்போது கருத்து தெரிவித்த ஹிஸ்புல்லா எம்.பி. கூறுகையில், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், நிபுணர்கள், ஆலோசகர்களின் கருத்துக்களைப் பெற்று வெளிநாட்டு உதவிகளுடன் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார். (எ)

## "முன்பள்ளி ஆசிரியைகளுக்கு கொடுப்பனவு வழங்கவில்லை"

திருகோணமலை, ஓக. 12

கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியைகளுக்கு கடந்த இரண்டு மாதங்களாக கொடுப் பனவு வழங்கப்படவில்லை என்ற தகவல் மிகவும் கவலை அளிக்கிறது. கிழக்கு மாகாண ஆளுநர் இது விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியைகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவு கடைசியாக மே மாதம் வழங்கப்பட்டதாகவும் ஜூன், ஜூலை மாதங்களுக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் முன்பள்ளி ஆசிரியைகள் எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். இது இந்த ஆசிரியைகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியாகும்.


கிழக்கு மாகாணத்தின் கல்விக்கு பலமான அத்திவாரம் இடுபவர்கள் முன்பள்ளி ஆசி ரியைகள் தான். இவர்களுக் கான மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதில் ஏன் இந்த அரசாங்கம் அலட்சியமாக உள்ளது?

கொடுப்பனவுக்கான நிதி இதுவரை விடுவிக்கப் படாததாலேயே கொடுப்பனவு வழங்க தாமதம் நிலவுவதாக கூறப்படுகின்றது. கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட முன்பள்ளி நிர்வாகமே இப்போது இயங்குகின்றது.

எனவே, ஆளுநரே இந்த விடயத்தில் தலையிட்டு மாதாந்தம் உரிய காலத்தில் கொடுப்பனவு வழங்குவதற்கான நிதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (எ)

### மட்டக்களப்பு கருவப்பங்கேணியில்

## 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் மூவர் கைது



மட்டக்களப்பு, ஓக. 12

**மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கருவப் பங்கேணி பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபா ரத்தில் ஈடுபட்ட நிந்தவூரைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 3 பேரை 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு கிலோ கேரளக் கஞ்சா, 50 கிராம் ஐஸ் போதைப்பொருள், 25 கிராம் ஹரோயின் போதைப்பொருட் களுடன் கைது செய்துள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி ஜி.எம். பிரியந்த பண்டார தெரிவித்தார்.**

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்தினவின் ஆலோசனைக்கமைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பரியந்த பண்டாரவின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் எஸ். சந்திமா தலைமையில் பொலிஸ் குழுவினர் சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு கருவப் பங்கேணி அம்புறோஸ் வீதியில் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் உட்பட 3 பேர் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, சுற்றிவளைத்து கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து போதைப் பொருட்களை பறிமுதல் செய்தனர்.

இதில் மட்டு. கருவப்பங்கேணியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவர், அம்பாறை சாய்ந்த மருதைச் சேர்ந்த 34 வயது நபர் மற்றும் நிந்தவூரைச் சேர்ந்த 35 வயது பெண் ஆகியோரை கைது செய்ததுடன் கைது செய்யப்பட்ட நிந்தவூரைச் சேர்ந்த பெண்ணின் கணவர் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதுடன் அவருடன் சிறையில் இருந்த கருவப்பங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த போதைப் பொருள் வியாபாரியான இளைஞனுக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

குறித்த இளைஞன் சிறையில் இருந்து நீதிமன்ற பிணையில் அண்மையில் வெளிவந்து நிந்தவூரைச் சேர்ந்த பெண்ணுடனும் சாய்ந்தமருதைச் சேர்ந்த இளைஞனுடன் சேர்ந்து போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலை மையக பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பு

கிண்ணியா, ஓக. 12

திருகோணமலை, கிண்ணியா நகர சபை எல்லைக்குள் போக்குவரத்துக்கு இடையூறாகவும் விபத்துகளுக்கு காரணமாகவும் வீதிகளில் நடமாடும் மாடுகள் பிடிக்கப்படும் என பலமுறை அறிவித்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் மூன்று மாடுகள் பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாடுகளின் உரிமையாளர்கள் உடனடியாக நகர சபை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.


கிண்ணியா பிரதான வீதி உட்பட பல வீதிகளில் கட்டாக் காலி மாடுகள் நடமாடுவதனால் பல விபத்து சம்பவங்கள், போக்குவரத்துக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாக நகர சபையின் தவிசாளர் எம். மஹ்தியின் கவனத்துக்கு கொண்டு வரப் பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தவிசாளர் தெரிவித்தார். (எ)


## ஓட்டோக்கள் பதிவு

தம்பலகாமம், ஓக. 12

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஓட்டோக்களுக்கு ஸ்ரிக்கர் மற்றும் பதிவு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள் ளப்பட்டன.

ஓட்டோவின் பின் பக்கத்தில் பொலிஸ் நிலைய தொலை பேசி இலக்கம் அடங்கிய ஸ்ரிக்கர் ஒட்டப் பட்டது. (எ)







அம்பாறை மாவட்டம் காரைதீவு மாவடி சிறீ கந்தசுவாமி கோவில் வருடாந்த ஆடிவேல் விழா தீர்த்தோற்சவம் அலங்கார காவடிகளுடன் ஊர்வலமாகச் சென்று சனிக்கிழமை காரைதீவுக் கடலில் சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்:- வி.ரி. சகாதேவராஜா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிச்சடங்கில் பங்கேற்றுவிட்டு வீடு திரும்பியபோது

# பேருந்து கவிழ்ந்து விபத்து கென்யாவில் 25 பேர் பலி!

நைரோபி, ஓக. 12

**கென்யாவில் இறுதிச்சடங்கில் பங்கேற்றுவிட்டு வீடு திரும்பியபோது பேருந்து கவிழ்ந்து விபத்தில் சிக்கியதில் 25 பேர் பரிதாபமாக பலியாகினர்.**

கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு கென்யா. இந்த நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள காகமெகா நகரை சேர்ந்த 30இற்கும் மேற்பட்டோர் உறவினரின் இறுதிச்சடங்கில் பங்கேற்க நேற்று முன்தினம் பேருந்தில் கிசுமு நகருக்கு சென்றனர். இறுதிச்சடங்கில் பங்கேற்றுவிட்டு அனைவரும் அதே பேருந்தில் சொந்த ஊர் திரும்பிக்கொண்டிருந்தனர்.

கிமுசா நகரை தாண்டி சென்றுகொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, திடீரென வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்தக் கோர விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 10 பெண்கள் உட்பட 25 பேர் உயிரிழந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கை முப்படைகளுக்கு முழு சுதந்திரம்

## இராணுவ தளபதி நெகிழ்ச்சி

சென்னை, ஓக. 12

ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது முப்படைகளுக்கு மத்திய அரசு முழு சுதந்திரம் அளித்ததால்தான் களத்தில் உத்வேகத்துடன் செயல்பட முடிந்தது என்று இராணுவத் தளபதி உபேந்திர திவேதி தெரிவித்தார்.

சென்னை ஐ.ஐ.டியில் இந்திய இராணுவ ஆராய்ச்சி மையமான 'அக்னிஷோத்' தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இராணுவத் தளபதி உபேந்திர திவேதி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, மையத்தை தொடங்கி வைத்தார். அவர் கூறுகையில், ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அடுத்த நாளான 23ஆம் திகதி சிறப்பு கூட்டம் கூட்டப்பட்டது.

அதில், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் முப்படை தளபதிகள் பங்கேற்றோம். பதிலடியாக ஏதாவது செய்ய வேண்டும் என் பதில் அனைவரும் தெளிவாக இருந்தோம். என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுக்க அரசிடம் இருந்து முழு சுதந்திரம் எங்களுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் முழுமையான நம்பிக்கை, அரசியல் தெளிவு கிடைத்ததால், இராணுவத் தளபதிகள் களத்தில் விருப்பப்படி செயல்பட முடிந்தது.

இந்த சந்திப்புக்கு 2 நாட்களுக்கு பிறகு, தீவிரவாத இலக்குகளை எவ்வாறு தாக்குவது என்பது குறித்து ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. தாக்குதல் நடத்த வேண்டிய இலக்குகளை முடிவு செய்தோம். திட்டமிடப்பட்ட 9 இலக்குகளில் 7 முக்கிய இலக்குகளை முழுவதும் அழித்தோம். இதில், ஏராளமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 'ஒப்ரேஷன் சிந்தூர்' என்ற இரண்டே வார்த்தை, ஒட்டுமொத்த தேசத்தையும் ஒருங்கிணைத்தது.

அதனால்தான் மொத்த நாடும் எங்களுக்கு ஆதரவாக இருந்தது. ஒப்ரே ஷன் சிந்தூர் நடவடிக்கை ஒரு சதுரங்க விளையாட்டுபோல இருந்தது. ஏனென்றால், எதிரியின் அடுத்த நகர்வு என்னவாக இருக்கும், என்ன செய்யப் போகிறார்கள் என்பது எங்களுக்கு தெரியாது. எதிரிகளும் சதுரங்க நகர்வுகளை செய்து வந்தனர். அவர்களுக்கு தொடர்ந்து 'செக்' வைத்துக் கொண்டு இருந்தோம்- என்றார். (எ)

# உக்ரைன் இன்றி நடைபெறும் ட்ரம்ப் - புடின் அமைதி பேச்சு

கீவ், ஓக. 12

உக்ரைனை சேர்க்காமல் நடைபெறவுள்ள ட்ரம்ப் - புடின் அமைதி பேச்சுவார்த் தைக்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி எதிர்ப்பு வெளி யிட்டுள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை நிறுத்துவது தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை எதிர்வரும் 15ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சந்தித்து பேசுகிறார். இதில் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக் கும் போருக்கு முடிவு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே நேரம் இந்த பேச்சுவார்த்தையில் உக்ரைனையும் சேர்க்க வேண்டும் என அந்த நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் தனது சமூக வலைத்தளத்தில், 'உக்ரைனின் பிராந்திய இறையாண்மையில் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை. நீடித்த அமைதிக்கான பேச்சுவார்த்தை மேஜையில் உக்ரைனின் குரலும் உள்ளடக்கியிருக்க வேண்டும்' என குறிப்பிட்டிருந்தார்.

மேலும் அவர், 'உக்ரைன் இல்லாமல் எடுக்கப்படும் எந்த முடிவுகளும் அமைதிக்கு எதிரான முடிவுகளாகும். அவை எந்தப் பலனையும்தராது. செத்துப் போன முடிவுகள். அவை ஒருபோதும் வேலை செய்யாது' என்றும் கடும் எதிர்ப்பை பதிவு செய்திருந்தார்.

ரஷ்யா செய்தவற்றுக்காக அதற்கு எந்த விருதையும் உக்ரைன் கொடுக்காது எனக்கூறியுள்ள ஜெலன்ஸ்கி என்றும் சாடியிருந்தார்.(எ)

# துருக்கியில் நிலநடுக்கம்: 16 கட்டடங்கள் தரைமட்டம்

## மீட்புப் பணிகள் தீவிரம்



இஸ்தான்புல், ஓக. 12

வடமேற்கு துருக்கியில் உள்ள சிந்திர்கி என்ற பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் பொதுமக்கள் பீதியடைந்தனர். இது ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவானது. இதில், ஒருவர் உயிரிழந்தார். மொத்தம் 16 கட்டடங்கள் தரைமட்டமானதாகவும் 29 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்தான்புல் மற்றும் சுற்றுலாப் பயணிகள் குவியும் இஸ்மிர் ஆகிய நகரங்கள் உட்பட துருக்கியின் மேற்கில் உள்ள பல முக்கிய நகரங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. நிலநடுக்கத்தின் மையப்பகுதியாக இருந்த சிந்திர்கி நகரில் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்ட சிறிது நேரத்திலேயே 81 வயது மூதாட்டி உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் பாலிகேசிர் மாகாணத்தில் உள்ள பல்வேறு கட்டடங்கள் இடிந்து விழுந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான படங்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. நாட்டில் உள்ள அனைத்து மீட்புக் குழுக்களும் உடனடியாக முடுக்கிவிடப்பட்டுள்ளதாக துருக்கி உள்துறை அமைச்சர் அலி யெர்லிகாயா தெரிவித்தார். மொத்தம் 16 கட்டடங்கள் தரைமட்டமானதாகவும் 29 பேர் காயமடைந்தனர் என்றும் அவர் கூறினார்.

கடந்த 2023ஆம் ஆண்டு துருக்கியில் தென்மேற்கு பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சுமார் 53,000 பேர் உயிரிழந்தனர். வரலாறு காணாத இந்த நிலநடுக்கம் துருக்கி நாட்டையே புரட்டி போட்டது. இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் துருக்கிக்கு நிதியுதவி செய்தன. இந்த சூழலில் தற்போது மீண்டும் அங்கு நிலநடுக்கம் ஏற்பட்டிருப்பது பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# ஆயுத சேமிப்பு கிடங்கில் வெடி விபத்து 6 பேர் பலி

பெய்ரூட், ஓக. 12

லெபனானில் ஆயுத சேமிப்பு கிடங்கில் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் இராணுவத்தினர் 6 பேர் பலியாகினர்.

லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே கடந்த ஆண்டு போர் மூண்டது. இந்தப் போரில் ஹிஸ்புல்லா பெரும் இழப்பை சந்தித்தது. அந்த அமைப்பின் முக்கிய தலைவர்கள் இஸ்ரேலால் கொல்லப்பட்டனர். இதையடுத்து, இஸ்ரேலுடனான போரை நிறுத்த ஹிஸ்புல்லா ஒப்புக்கொண்டது.

இதையடுத்து ஹில்புல்லா அமைப்பினர் தங்களிடம் உள்ள ஆயுதங்களை ஒப்படைக்க லெபனான் அரசு அறிவுறுத்தியுள்ளது. மேலும், இஸ்ரேலுடனான மோதலின்போது எல்லையில் ஹிஸ்புல்லா பயன்படுத்திய ஆயுதக்கிடங்குகளும் லெபனான் இராணுவம் வசம் வந்துள்ளது. அந்த ஆயுதக்கிடங்குகளில் உள்ள ஆயுதங்களை செயலிழக்க செய்யும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அந்த நாட்டின் டிரே மாகாணம் சிப்கியுன் பகுதியில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் கைவிடப்பட்ட ஆயுத சேமிப்பு கிடங்கை லெபனான் இராணுவத்தினர் கைப்பற்றினர். அந்த ஆயுதக்கிடங்களில் உள்ள ஆயுதங்கள், வெடிபொருட்களை செயலிழக்க செய்யும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டனர். அப்போது எதிர்பாராத விதமாக ஆயுத சேமிப்பு கிடங்கில் வெடி விபத்து ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினர் 6 பேர் உயிரிழந்தனர். மேலும், சில இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இதையடுத்து, படுகாயமடைந்த இராணுவத்தினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

# அமைதிக்காக பாடுபடும் ஐரோப்பிய தலைவர்கள்

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நன்றி

கீவ், ஓக. 12

உக்ரைன் தேசத்தின் அமைதிக்காக ஆதரவு அளிப்பவர்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டு தொடங்கிய உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போரை நிறுத்த பல்வேறு உலக நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

இரண்டாவது முறை யாக அமெரிக்க ஜனாதிபதி யான ட்ரம்ப், தனது தேர்தல் பிரசாரம் மற்றும் பல்வேறு உரைகளில் தொடர்ந்து உக்ரைன் - ரஷ்யா போர் நிறுத்தம் குறித்து பேசி வருகிறார்.


இந்தச் சூழலில் ஐரோப்பாவில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்கள் உக்ரைனில் அமைதி திரும்ப வேண்டும் என கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, ஜேர்மனி ஜனாதிபதி பிரெட்ரிக் மெர்ஸ், பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மர், போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க், பின்லாந்து ஜனாதிபதி ஸ்டப் மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், "போரின் முடிவு நியாயமானதாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன். உக்ரைனின் அமைதிக்காக உக்ரைனுடனும் மக்களுடனும் நிற்கும் அனைவருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். இது நமது ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு நலனை உறுதி செய்கிறது.

உக்ரைனின் அமைதிக்காக பேசி அறிக்கை வெளியிட்டுள்ள தலைவர்களை உக்ரைன் முழுமையாக ஆதரிக்கிறது" என ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 5 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி மே. இ. தீவுகள் வெற்றி

டிரினிடாட், ஓக. 12

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை பாகிஸ்தான் 2-1 என கைப்பற்றியது. முதல் ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் வென்றது. இந்த நிலையில், 2ஆவது ஒருநாள் போட்டி டிரினிடாட்டில் நேற்று நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 37 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்கள் எடுத்தது. ஹசன் நவாஸ் 36 ஓட்டங்களும் ஹூசைன் தலாத் 31 ஓட்டங்களும் எடுத்தனர். இதையடுத்து மழை காரணமாக ஆட்டம் பாதிப்படைந்தது. மேற்கு இந்திய தீவுகளின் ஜெய்டன் சீலஸ் 3 விக்கெட்கள் கைப்பற்றினார். இதையடுத்து, டக்வொர்த் லூயிஸ் முறைப்படி 35 ஓவர்களில் 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கு இந்திய தீவுகள் அணி களமிறங்கியது.

முன்னணி வீரர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர். ஒரு கட்டத்தில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 107 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது. 6ஆவது விக்கெட்டுக்கு ரோஸ்டன் சேஸ், ஜஸ்டின் கிரீவ்ஸ் ஜோடி இணைந்து பொறுப்புடன் ஆடி வெற்றிக்கு அழைத்துச் சென்றது. ரோஸ்டன் சேஸ் 49 ஓட்டங்களும் ஜஸ்டின் கிரீவ்ஸ் 26 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில், மேற்கு இந்திய தீவுகள் அணி 33. 2 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 184 ஓட்டங்கள் எடுத்து, 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் 1-1 என சமனிலை வகிக்கிறது. ஆட்ட நாயகன் விருது ரோஸ்டன் சேஸுக்கு வழங்கப்பட்டது. (எ)

## சின்சினாட்டி ரென்னிஸ் ஜெசிகா அபார ஆட்டம்



சின்சினாட்டி, ஓக. 12

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் போட்டியில் ஜெசிகா பெகுலா 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சின்சினாட்டி ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்று வருகிறது. அமெரிக்க ஓபினுக்கு முன்னோட்டமாக கருதப்படும் நூற்றாண்டு கால பழமைவாய்ந்த இந்தப் போட்டியில் முன்னணி வீரர், வீராங்கனைகள் அனைவரும் பங்கேற்றுள்ளனர்.

இதில் நேற்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான ஜெசிகா பெகுலா - அவுஸ்திரேலியாவின் கிம்பர்லி பிர்ரெல் உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய ஜெசிகா பெகுலா 6-4, 6-3 என்ற நேர் செற் கணக்கில் கிம்பர்லி பிர்ரெல்லை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி

### இறுதி வரை போராடி தென்னாபிரிக்கா தோல்வி



டார்வின், ஓக. 12

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி மூன்று ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ரி - 20 தொடர் நடைபெறுகிறது.

இதன்படி முதல் போட்டி டார்வினில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 178 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக டிம் டேவிட் 52 பந்துகளில் 83 ஓட்டங்கள் அடித்தார். தென்னாபிரிக்கா தரப்பில் மபாகா 4 விக்கெட்களும் ரபாடா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

பின்னர் 179 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற சவாலான இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக மார்க்ரம் - ரிக்கெல்டன் களமிறங்கினர். இதில் மார்க்ரம் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின்னர் வந்த பிரிட்டோரியஸ் (14 ஓட்டங்கள்), பிரெவிஸ் (2 ஓட்டங்கள்) தாக்குப்பிடிக்கவில்லை.

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் ரிக்கெல்டன் தென்னாபிரிக்க அணிக்கு நம்பிக்கை அளித்தார். இருப்பினும், அவுஸ்திரேலிய அணியின் துல்லியமான பந்துவீச்சு தாக்குதலால் அவரால் அதிரடி காட்ட முடியவில்லை. அவருடன் சிறிது நேரம் ஜோடி சேர்ந்து விளையாடிய ஸ்டப்ஸ் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து வந்த வீரர்களில் ஜார்ஜ் லிண்டே (0), கார்பின் போஷ் (2) மற்றும் செனுரன் முத்துச்சாமி (0) என சொற்ப ஓட்டங்களில் நடையை கட்டினர். கடைசி ஓவரில் தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் களத்தில் ரிக்கெல்டன் இருந்ததால் அந்த அணிக்கு வெற்றி மேல் நம்பிக்கை இருந்தது.

ஆனால், அந்த ஓவரின் 2ஆவது பந்திலேயே அவர் ஆட்டமிழந்தார். அத்தோடு தென்னாபிரிக்க அணியின் வெற்றி வாய்ப்பும் பறிபோனது. முடிவில் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 161 ஓட்டங்கள் மட்டுமே அடித்தது. இதன் மூலம் அவுஸ்திரேலியா 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளது.

தென்னாபிரிக்க தரப்பில் அதிகபட்சமாக ரிக்கெல்டன் 71 ஓட்டங்கள் அடித்தார். அவுஸ்திரேலியா தரப்பில் ஜோஷ் ஹேசில்வுட் மற்றும் பென் துவார்ஷியூஸ் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். (எ)

## சபலெங்கா முன்னேற்றம்




சின்சினாட்டி, ஓக. 12

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரில் அரினா சபலெங்கா வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் பெலாரஸின் முன்னணி வீராங்கனையான அரினா சபலெங்கா - செக் குடியரசின் மார்கெட்டா வோண்ட்ரூசோவா உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய சபலெங்கா 7-5, 6-1 என்ற செற் கணக்கில் மார்கெட்டா வோண்ட்ரூசோவாவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

## சின்சினாட்டி ரென்னிஸ்: பென் ஷெல்டன் வெற்றி



சின்சினாட்டி, ஓக. 12

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரில் பென் ஷெல்டன் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். இந்த சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் பென் ஷெல்டன் - ஆர்ஜென்ரீனாவின் கமிலோ யூகோ காரபெல்லி உடன் மோதினார்.

இதில், முதல் செற்றை 6-3 என்ற புள்ளிக்கணக்கில் பென் ஷெல்டன் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது செற்றில் ஷெல்டன் 3-1 என்ற புள்ளிக்கணக்கில் இருந்தார். அப்போது காயம் காரணமாக கமிலோ யூகோ காரபெல்லி போட்டியில் இருந்து வெளியேறினார். இதன் காரணமாக ஷெல்டன் 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

## பாகிஸ்தான் ஆறுதல் வெற்றி ரி-20 தொடர் அயர்லாந்து வசம்

டப்ளின், ஓக. 12

பாகிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் அயர்லாந்து அணி கைப்பற்றியது.

பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் ரி - 20 தொடரில் விளையாடியது. இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் இரு போட்டியில் அயர்லாந்து வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றிவிட்டது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் அயர்லாந்தை 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பாகிஸ்தான் ஆறுதல் வெற்றி பெற்றது.




இறுதியில் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் அயர்லாந்து கைப்பற்றியது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழை அனர்த்த...

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/351 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஐவரும், ஜே/363 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 7பேரும், ஜே/364 கிராம சேவகர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 18பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/393 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ-05)

## பிரதமர்...

செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுப்ரீம்செட் தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகளை அமைச்சரொருவர் திருத்தியிருந்தார்.

பிரதமர் தவறான கருத்துகளை தெரிவித்திருந்தால் ஜனாதிபதியே அதனை திருத்த வேண்டும். எந்தவொரு நாட்டிலும் கனிஷ்ட அமைச்சரொருவர் பிரதமரின் கருத்துகளை திருத்திய வரலாறுகளை காணமுடியாது.

தற்போது ஹரிணி அமரசூரியவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு ஜே.வி.பியின் பிமல் ரத்நாயக்கவை அந்த பதவிக்கு நியமிக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

எனவே,ஜே.வி.பியின் தலைவர்கள், ஹரிணி அமரசூரிய தொடர்பில் அவதூறுகளை பரப்பி, அவரை உள ரீதியாக பலவீனமடையச் செய்து, தாமாகவே பதவி விலகும் நிலைக்கு அவரை கொண்டுவருவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர் - என்றார். (அ)

## நிர்வாக முடக்கல்...

உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

"பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இராணுவத்தினருடன் தொடர்புடைய இந்த சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை செய்து, உரியவர்களுக்கு தண்டனை வழங்க வழிசெய்ய வேண்டும்.

அத்துடன் இதனை அடிப்படையாக கொண்டு, வடக்கு கிழக்கின் மேலதிக இராணுவ பிரசன்னத்தை உடன் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன அடிப்படையிலான போர் செய்த இராணுவ சிப்பாய்களின் மனங்களில் இனவாதம் தங்கி இருக்கத்தான் செய்யும்.

எனவே அவர்களை தென்னிலங்கைக்கு அழைத்துவந்து, "குளம் வெட்டுவது, தூர் எடுப்பது, வீதி அமைப்பது, வீடு கட்டுவது, விருந்தகங்களை நடத்துவது, தோட்டம் செய்வது, காய்கறி சந்தை நடத்துவது" போன்ற இன்ன பிற அபிவிருத்தி பணிகளில் ஜனாதிபதி அவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

அன்றைய அரசாங்கள் மாறி, மாறிச் செய்தவற்றை செய்ய நாம் வரவில்லை. மாற்றம் ஏற்படுத்தவே நாம் வந்தோம் எனக் கூறி இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. முன்னைய ஆட்சியாளர்கள் செய்ததையே, தற்போதைய அரசாங்கமும் மேற்கொள்ளுமானால் அதனை எதிர்ப்போம்.

இந்தநிலையில், வடக்கு கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் வெள்ளிக்கிழமை, நிர்வாக முடக்கல் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அழைப்பு விடுத்துள்ள இலங்கை தமிழரசு கட்சியின் கோரிக்கையை, தமிழ் முற்போக்குக் கூட்டணி வரவேற்று, ஆதரவை வழங்கும்- என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (அ)

## பலத்த...

பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்றது.

முத்தையன்கட்டுகுளம் இடதுகரை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் இராணுவ முகாமிற்கு வாருங்கள். தகரங்கள் கழற்ற வேண்டும் என குறித்த பகுதி இளைஞர் ஒருவருக்கு ஒரு தொலைபேசி இலக்கத்தில் இருந்து 07.08.2025 அன்று இரவு 7.30 மணியளவில் அழைப்பு ஏற்படுத்தப்பட்டு ஐவர் முகாமுக்கு சென்ற நிலையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் நால்வர் தப்பியோடினர். ஒருவர் அப்பகுதி குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இறந்தவவரின் இறுதி ஊர்வலம் பொலிஸ் பாதுகாப்புடன் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் பிரசன்னத்துக்கு மத்தியில் நேற்று இடம்பெற்றிருந்தது. (அ)

## எமது நிலம்...

முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மன்னார் பஜார் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த போராட்டத்தில் கலந்துகொள்ள வடக்கு-கிழக்கை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், வடக்கு கிழக்கை சேர்ந்த அரசியல் செயல்பாட்டாளர்களை குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.

குறித்த போராட்டம் ஊடாக நாங்கள் தென்னிலங்கைக்கு ஓர் செய்தியை சொல்ல வேண்டும். எமது மக்களையும், மண்ணையும் யாரும் அபகரிக்க முடியாது. நாங்கள் துப்பாக்கி ஏந்தி போராடிய போது தியாகங்களை செய்தவர்கள்.

எனவே அரசியல் கட்சி பேதங்களின்றி பாராளுமன்ற உறுப்பினர்கள், நகர சபை, பிரதேச சபை, மாநகர சபை உறுப்பினர்கள், அனைவரும் குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

தென்னிலங்கைக்கு நாங்கள் பாடம் புகட்டும் வகையில் எமது மண்ணையும் மக்களையும் காப்பற்றும் வகையில் இடம் பெறும் இப் போராட்டத்தில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் அழைப்பு விடுக்கிறோம்-என்றார். (அ)

## தனியார்...

நீண்ட நேரமாகியும் வீடு வந்து சேராமையால் பெற்றோர் மற்றும் உறவினர்கள் குறித்த மாணவியை தேடியுள்ளனர்.

இதன்போது, குறித்த மாணவியின் புத்தகப்பை, துவிச்சக்கர வண்டி என்பன மாணவி கல்வி பயின்ற தனியார் கல்வி நிலையத்தில் காணப்பட்டதுடன், அக் கல்வி நிலைய வளாகத்தில் இருந்த கிணற்றின் அருகே மாணவியின் செருப்பும் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பெற்றோர் மற்றும் கல்வி நிலைய நிர்வாகத்தினர் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார், மாநகர சபையினர், கிராம அலுவர், கிராம மக்கள், மாணவர்கள் எனப் பலரும் இணைந்து 40 அடி ஆழமான கிணற்றில் தேடுதல் மேற்கொண்டு குறித்த மாணவியை சடலமாக மாலை மீட்டு எடுத்தனர்.

குறித்த சம்பவத்தில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்வி பயிலும் வவுனியா, கோமரசன்குளம் பகுதியைச் சேர்ந்த மாணவியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலமாக மீட்கப்பட்ட மாணவியின் சடலம் வவுனியா வைத்தியாசலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மன்னார் நகர சபையில் முறைகேடுகள் வடக்கு மாகாண ஆளுநரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 12

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், மன்னார் நகர சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

மன்னார் நகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அவசரம் தேவை என்றும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேசசபையின் வருமானத்தை அதிகரிப்பதற்குரிய வேலைத் திட்டங்களுக்கு உதவிகளை வழங்குமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதேவேளை, சோலைவரி மீளாய்வை மேற்கொள்ளுமாறு ஆளுநர் கேட்டுக் கொண்டதுடன், தவிசாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் நிறைவேற்றக்கூடியவற்றை விரைவில் நிறைவேற்றித் தருவதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன், உபதவிசாளர் உசைன், மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஞா.பிரேம்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## 32 பதின்ம...

தரித்திருந்தனர்.

இந்த நிலையில் இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில் 32 சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், மாணவர்களுக்கு முறையான பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டும் என்றும் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

## மன்னார்...

அந்தக் கூற்றுக்களை ஆதரிக்க எந்த ஆதாரமும் இல்லை என்றும், மன்னாரிலிருந்து பூநகரிக்கு வடக்கே உள்ள பகுதி வெறும் தரிசு நிலம் என்றும் கூறினார்.

சமூகத்தில் உள்ள சில பிரிவினர் மன்னாரை காற்றாலைகளால் அழிக்கப்படும் ஒரு "சொர்க்கம்" என்று சித்தரித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மன்னாரில் இருந்து பூநகரிக்கு வடக்கே உள்ள பகுதி தரிசு நிலம் என்றும், மக்கள் பறவைகளைப் பற்றிப் பேசினாலும், அந்தப் பாதையில் எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார். (அ)

## ஜனாதிபதிகளின்...

இரத்து செய்வதற்காக, 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் எண் ஜனாதிபதி உரிமைச் சட்டத்தை இரத்து செய்வதற்கான தொடர்புடைய சட்டமூலம் அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள் இரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலத்தின்படி, முன்னாள் ஜனாதிபதி அல்லது மனைவிக்கு வழங்கப்படும் எந்தவொரு வீடு, மாதாந்த கொடுப்பனவும், மாதாந்த செயலக கொடுப்பனவு, போக்குவரத்து, பிற வசதிகள் மற்றும் மாதாந்த ஓய்வூதியமும் இரத்து செய்யப்படவுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளை இரத்து செய்யும் வகையில், ஜனாதிபதியின் உரிமைகள் சட்டத்தை இரத்து செய்வதற்கான சட்டமூலத்திற்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த 07ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை நீக்குவது தொடர்பான சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி நேற்று உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

## மண்கும்பானில்...

அடையாளம் காணப்படவில்லை.

மீட்கப்பட்ட சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் கடந்த வாரம் புங்குடுதீவு பகுதியில் ஆள் எவருமற்ற படகு ஒன்று கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## 3 முன்னாள்...

மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேசல ஜயரத்ன ஆகியோருக்கு எதிராக இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த முன்னாள் முதலமைச்சர்களுக்கு எதிராக அவர்களின் சட்டவிரோத வருவாய் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகளை கருத்தில் கொண்டு, கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக விசாரணைப் பிரிவுகள் தெரிவிக்கின்றன. (அ)

## சபாநாயகருக்கு...

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் பாராளுமன்ற ஆய்வு மற்றும் ஆராய்ச்சி மையமாக மாற்றப்பட்டுள்ளதாகவும், நிறுவன சட்டக் கோவையின்படி சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தை வேறு எந்த நோக்கத்துக்காகவும் பயன்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டால், அமைச்சரவை ஒப்புதல் தேவை என்றும், தற்போது அமைச்சரவை ஒப்புதல் பெறாமல் அதற்காக பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

அத்தகைய ஒப்புதலை வழங்க ஆலோசனைக் குழுவுக்கும் அதிகாரம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இது அரச சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தும் நடவடிக்கை என்பதால், இதனை விசாரிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே,ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகளால் தீர்வையற்ற வர்த்தக நிலையங்களிலிருந்து சட்டவிரோதமாக மதுபான போத்தல்களை பெற்ற சம்பவம் தொடர்பாக, சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி அண்மையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்காவுடன் இலங்கை அரசு நட்புறவுடன் செயல்படவேண்டும்!

## பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 12

உலகின் மிக சக்திவாய்ந்த நாடான அமெரிக்காவுடன் இலங்கை மிகவும் நட்புறவுடன் செயல்படவேண்டும் என பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியல், சமூக மற்றும் கலாசார ரீதியாக அமெரிக்காவுடன் நட்புறவுடன் பணியாற்றவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கான அவசியம் உள்ளதென பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அமெரிக்காவுடன் மட்டுமல்லாமல் பிற நாடுகளுடனும் வர்த்தக ஒப்பந்தங்களை செய்வதற்கான சாத்தியக்கூறுகளை கருத்தில் கொள்ள வேண்டும் என பேராசிரியர் வசந்த அத்துக்கோரள மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## காசாவில் ஊடகவியலாளர்கள் பலி சஜித் பிரேமதாஸ கடும் கண்டனம்



கொழும்பு, ஒக. 12

காசாவில் அல்ஜசீராவின் ஊடகவிய லாளர்கள் ஐவரை இஸ்ரேல் கொலை செய்துள்ளதை கடுமையாக கண்டித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இது உண்மை மீதான தாக்குதல் என தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

பத்திரிகையாளர்களை வேண்டுமென்றே கொலை செய்வது உண்மை மீதான தாக்குதலாகும்.

செய்தி அறிக்கையிடலுக்காக தங்களின் உயிர்களை பணயம் வைத்து போர்முன்னரங்கில் செயற்படுபவர்களை மௌனமாக்குவது மனித குலத்திற்கு எதிரான ஊடக சுதந்திரத்திற்கு எதிரான குற்றம்.

ஊடக சுதந்திரத்திற்காக குரல் கொடுக்கும் அதற்கு ஆதரவளிக்கும் அனைத்து ஜனநாயக நாடுகளும் இந்த கொலைக்கு பொறுப்புக்கூறலை கூறவேண்டும்-என்றார்.

## பொலிஸார் கடமைகளை சரியாக செய்யவேண்டும்

### அமைச்சர் ஆனந்த விஜேபால



கொழும்பு, ஒக. 12

பொலிஸார் கடமைகளை சரியாகச் செய்யத் தவறினால் சமூகத்தில் கடுமையான விமர்சனங்கள் எழக்கூடும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

மகியங்கனைப் பகுதியில் நடைபெற்ற கூட்டமொன் றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை பொலிஸார் நித்திரை கொள்கின்றனரா என்று மக்கள் கேள்வி எழுப்புவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் ஏனைய குற்றச் செயல்கள் மூலம் மனித உயிர்கள் காவு கொள்ளப்படுபவதுடன் சொத்துக் களும் அழிக்கப்படுகின்றன.

குற்றச் செயல்களை கட்டுப்படுத்தி மக்கள் மகிழ்ச்சியாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதே அரசாங்கத் தின் கடமை.

நீதியை நிலைநாட்டுவதற்கு காலம் தாழ்த்தப்படக் கூடாது. அவ்வாறு உரிய நேரத்தில் நீதி நிலைநாட்டப் படாவிட்டால் பெரும் சோகங்கள் நிகழக்கூடும்.

பொலிஸார் கடமைகளை சரியாகச் செய்யத் தவறினால் சமூகத்தில் கடுமையான விமர்சனங்கள் எழக் கூடும்-என்றார். (அ)

## ரயில் திணைக்களத்தின் நடவடிக்கை தரகர்களின் மோசடிக்கு முற்றுப்புள்ளி

கொழும்பு, ஒக 12

இலங்கை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டுள்ள கடுமையான நடவடிக்கை காரணமாக ஆசனப் பதிவு முறையில் இடம்பெற்று வந்த மோசடிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அழகான இயற்கைக் காட்சிகளை கண்டு களித்தபடி பயணம் செய்ய முடியும் என்பதன் காரணமாக மலையகத்துக்கான ரயில்களின் குளிரூட்டப்பட்ட பெட்டிகள் மற்றும் முதலாம், இரண்டாம் வகுப்பு பெட்டிகளின் ஆசனங்களில் பயணிக்க வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

அதனை அடிப்படையாக வைத்து வேறொருவர் பெயரில் முன்பதிவு செய்யப்பட்ட ஆசனங்களை சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் மோசடியொன்று அண்மைக் காலமாக இடம் பெற்று வந்துள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில் முன்பதிவு செய்யப்பட்ட ஆசனங்களில் உரியவர்கள் மட்டுமே பயணிக்க முடியும் என்றொரு புதிய நடைமுறையை இலங்கை ரயில்வே திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அவ்வாறு ஆசனப் பதிவுகளை மேற்கொண்டவர்கள் தங்கள் அடையாளத்தை நிரூபித்தால் மாத்திரமே உரிய ஆசனங்கள் அவர்களுக்கு வழங்கப்படும். உள்நாட்டவர்களாக இருந்தால் தேசிய அடையாள அட்டை அல்லது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளாக இருந்தால் அவர்களின் கடவுச்சீட்டு அதற்கான முக்கிய ஆவணங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தங்கள் பெயர்களில் ஆசனங்களை முன்பதிவு செய்து வேறு நபர்களுக்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வந்த தரகர்களின் மோசடி செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கட்டுள்ளது.

நேற்று காலை கொழும்பில் இருந்து பதுளைக்குப் புறப்பட்ட ரயிலின் முதலாம் வகுப்பு ஆசனங்கள் அனைத்தும் முன்பதிவு செய்யப்பட்டிருந்தபோதும் அடையாளத்தை நிரூபிப்பதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக முதலாம், இரண்டாம் வகுப்பு பெட்டிகள் வெறிச்சோடிய நிலையில் ரயில் புறப்பட்டுச் சென்றுள்ளது. (அ)

## தமிழ் இளைஞனுக்கு வலை வீசும் கனடா!

மொன்றியல், ஒக. 12

கனடாவில் தமிழ் இளைஞன் ஒருவர் தேடப்பட்டு வருவதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

றொறன்ரோவைச் சேர்ந்த 36 வயதான பிரதீபன் நாகராஜா என்பவரே தேடப்பட்டு வருகின்றார்.

எனினும் அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்ற தகவல் வெளியாகவில்லை.

ஆபத்தான நபராக பெயரிடப் பட்டுள்ள குறித்த இளைஞனை சரணடையுமாறு றொறன்ரோ பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த தமிழ் இளைஞன் மீது இரண்டு கொலை முயற்சி குற்றச்சாட்டுகளுடன், துப்பாக்கியை பயன்படுத்தியதாகவும், அனுமதியின்றி துப்பாக்கியை வைத்திருந்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

## அரசியலமைப்பு சபை இன்று கூடுகிறது

கொழும்பு, ஒக. 12

37ஆவது பொலிஸ் மா அதிபரின் நியமனம் குறித்து விவாதிக்க அரசியலமைப்பு சபை இன்று கூடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோன் பதவியில் இருந்து நீக்கப் பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பொலிஸ்மா அதிபர் பதவிக்கு பிரியந்த வீரசூரியவை முன்மொழிந்துள்ளார்.

இது தொடர்பான கூட்டம் இன்று பிற்பகல் 1:30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

## வீதியில் தீப்பிடித்த லொறி!

கொழும்பு, ஒக. 12

தெற்கு அதிவேக வீதியில் கொட்டாவையிலிருந்து பயணித்த லொறியொன்று தடுப்பு வேலிகளில் மோதி விபத்துக்குள்ளானதோடு தீப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருந்துகஹஹெத்கம பகுதியிலேயே இவ் விபத்து நடந்துள்ளது.விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் கூறினர். (அ)

## ஜனாதிபதி நிதியத்தில் உதவி பெற்ற அரசியல்வாதிகளுக்கு சிக்கல்நிலை!

கொழும்பு, ஒக. 12

ஜனாதிபதி நிதியிலிருந்து உதவித்தொகை பெற்ற அரசியல் வாதிகளின் குழந்தைகள் மற்றும் உறவினர்களிடமிருந்து பணத்தை உடனடியாக அறவிட அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது தொடர்பாக சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட உள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த உதவித்தொகை பெற்ற வர்களின் பட்டியலை சட்டத்துறை தற்போது விரிவாக ஆய்வு செய்து வருகிறது.

மேலும் பணத்தை மீட்டெடுப் பது தொடர்பாக சட்ட ஆலோச னையும் பெறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியிலிருந்து வெளிநாட்டு உதவித்தொகை பெறுவது தொடர்புடைய சட்டத்தின் விதிகளின்படி சட்டவிரோதமானது என்று சட்டத்துறை சுட்டிக்காட்டுகிறது.

இந்தத் தகவலை வெளிப்படுத் திய நகர மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சர் அனுர கருணாதிலக்க, முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்க ளின் குழந்தைகள் உட்பட 72 க்கும் மேற்பட்டோருக்கு ரூ. 200 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள வெளிநாட்டு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்

இந்த நபர்களில் பெரும்பாலா னோர் முன்னாள் அரசியல்வா திகளின் உறவினர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இராமேஸ்வரம் கடற்றொழிலாளர் நேற்று முதல் பணிப்புறக்கணிப்பு

சென்னை, ஒக. 12

இலங்கையின் கடற்படையினரால் கைது செய்யப்படுவதை கண்டித்து நேற்று முதல் இராமேஸ்வரம் கடற்றொழிலாளர்கள், காலவரையறையற்ற பணிப்புறக் கணிப்பை அறிவித்துள்ளனர்.

இதற்கான முடிவு நேற்று முன் தினம் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக, அதிகளவில் இலங்கையின் கடற்படையினரால், தமது தரப்பினர் கைது செய்யப்படுவதாக தமிழக கடற்றொழிலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதேநேரம் அவர்களை விடுதலை செய்யும் முனைப்புகளும் தாமதமாகி வருவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் தமிழக கடற்றொழிலாளர்களின் அடிமட்ட இழுவைப்படகுகள் [illegible] தமது மீன்வளம் அருகி வருவதாக இலங்கையின் வடபகுதி கடற்றொழிலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே தமிழக கடற்றொழிலாளர்களை இலங்கையின் கடற்படை தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் இலங்கையின் வடபகுதி கடற்றொழிலாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.